# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் - 07.04.2026**

**முன்னிலை**

**திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA 14482/F/2023**

திரு.P.M.ஸாஹீல்ஹமீது .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுதகவல் அலுவலர் /
பிரிவு அலுவலர்,
போக்குவரத்து துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-09. .. பொது அதிகார அமைப்பு

**ஆணை**

இவ்வாணையத்தில் இன்று 07.04.2026 நடைபெற்ற விசாரணைக்கு மனுதாரர் திரு.P.M.ஸாஹீல்ஹமீது அவர்கள் ஆஜரானார். பொது அதிகார அமைப்பின் சார்பாக, பொதுத்தகவல் அலுவலர் திருமதி.தி.சுஜாதா, பிரிவு அலுவலர், போக்குவரத்து துறை, தலைமைச் செயலகம், சென்னை-09 அவர்கள் ஆஜரானார். இதனை ஆணையம் பதிவு செய்கிறது.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன் கீழ், 22/06/2023 தேதியிட்டு தாக்கல் செய்துள்ள மனுவில் அரசு போக்குவரத்து கழகம் எப்போது தோற்றுவிக்கப்பட்டது என்ற விபரத்தையும் எந்தெந்த தலைவர்களின் பெயரில் தோற்றுவிக்கப்பட்டது என்ற விபரத்தையும் அரசுபோக்குவரத்து கழகமாக எப்போது மாற்றம் செய்யப்பட்டது என்ற விபரம் என்பன போன்ற 21 தகவல்களைக் கோரியுள்ளார்.

3. அம்மனுவைப்பெற்ற பொதுத்தகவல் அலுவலர் 03.07.2023 நாளிட்ட கடிதத்தின் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இருப்பினும் மனுதாரர் தனக்கு சரியான தகவல் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 19(1)ன் கீழ் 11.07.2023 நாளிட்ட முதல் மேல்முறையீட்டு மனுவினை தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலர் 28.11.2024 நாளிட்ட கடிதம் மூலம் தகவல் வழங்கியுள்ளார். இந்நிலையில் மனுதாரர், மேல்முறையீட்டு அலுவலர் தனக்கு முழுமையான தகவல்கள் வழங்கவில்லை என தகவல் அறியும் உரிமைச் சட்டம், பிரிவு 19(3)ன் கீழ் 10.08.2023 நாளிட்ட இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாக்கல் செய்துள்ள அவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.04.2026) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய நேரடி விசாரணைக்கு ஆஜரான பொதுதகவல் அலுவலர் மனுதாரர் 6(1) மனுவில் கோரிய இனங்கள் குறித்து 03.07.2023 மற்றும் 28.11.2024 தேதியிட்ட கடிதங்கள் மூலம் தகவல்கள் வழங்கப்பட்டிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் இன்றைய விசாரணைக்கு தாமதமாக ஆஜரான மனுதாரர் தனக்கு சரியான தகவல் கிடைக்கவில்லை என்று கோரினார்.

5. இன்றைய விசாரணையில் ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் இவ்வாணையம் கீழ்காணும் உத்தரவினை பிறப்பிக்கிறது.

**மனுதாரரின் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 6(1)ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள இனங்களுக்கு பொதுத்தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட 03.07.2023 மற்றும் 28.11.2024 நாளிட்ட கடிதங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரர் அதிகப்படியான தகவல்கள் கோரியிருப்பதால் *பொது அதிகார அமைப்பின் 75 சதவிகிதப் பணியாளர்கள் தங்களின் பணி நேரத்தில் 75 சதவிகிதத்தைத் தங்களின் அன்றாட பணிகளை மேற்கொள்வதற்கு செலவழிக்காமல், தகவல்களை சேகரிப்பதற்கும் அத்தகவல்களைக் கொடுப்பதற்குமே செலவழிக்கும் நிலை உருவாகும்* என்பதால் மனுதாரருக்கு தேவையான தகவல்களை 8 அரசு போக்குவரத்துக் கழகங்களில் தனித்தனியாக மனுவினை தாக்கல் செய்து தேவையான தகவல்களை பெற்றுக்கொள்ளுமாறு அறிவுறுத்தி இவ்விரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.**

**ஓம்/-(அபய் குமார் சிங்)**
**மாநில தகவல் ஆணையர்**

(ஆணையத்தின் ஆணைப்படி)

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 14482/F/2023</u>**

பெறுநர்

**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுதகவல் அலுவலர் /
பிரிவு அலுவலர்,
போக்குவரத்து துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-09.

**<u>புகார்தாரர்:-</u>**

திரு.Shahul Hameed,
No.212. East Main Road,
Labbaikudikadu Post,
Kunnam Taluk,
Perambalur- 621108.

Copy to file: KR/PA